# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,388 — 1924 ம் ௵ சித்திரைமீ 17 ந் திகதி வியாழக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

**No. 992, N. P.**—1924 ம் ஆண்டு ஆனி மாதம் 2 ந் திகதி, திங்கட்கிழமை வவுனியாவில் தன் ஆபீசில் பகல் 11.30 மணியளவில் வடமாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கு கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 41 காணித்துண்டுகள், வடமாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக் வவுனியா தெற்குப்பகுதியிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏககரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 4,454. குறிச்சி—பெரியசிப்பிக்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 2A | பாலையடிக்கமம் .. | அருகதனைக்காரன் பிச்சைத்தம்பிக்காக பி. காட்டுவாவா | நெல்வயல் .. | 0 | 1 | 11 | 20* |
| | பிளான் இலக்கம் 5,726. குறிச்சி—வவுனியவிளாங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 7 | பெரியநெற்பிலவு .. | வி. முருகேசு அருகதனம் .. | நெல்வயல் .. | 0 | 0 | 6 | 100*† |
| | பிளான் இலக்கம் 5,936. குறிச்சி—பட்டாணிச்சிபுளியங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | பாலையடிக்கமம் .. | மீ. சுலைமான் .. | நெற்செய்கைக்கேற்ற கீழ்காடு | 1 | 2 | 9 | 37‡ |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 3 | 9 | 20 |
| | பிளான் இலக்கம் 5,939. குறிச்சி—வெளிக்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 2 | காஞ்சூரையடிவளவு .. | ம. தம்பையா .. | கீழ்காடு .. .. | 0 | 3 | 38 | 33‡ |
| 3 | ஷை .. | — .. | கீழ்காடு .. .. | 1 | 0 | 0 | 33·50‡ |
| 4 | ஷை .. | — .. | கீழ்காடு .. .. | 1 | 0 | 0 | 33·50‡ |
| 7 | இத்தியடிவளவு .. | ம. தம்பையா .. | கீழ்காடு .. .. | 1 | 1 | 11 | 34‡ |
| | பிளான் இலக்கம் 5,958. குறிச்சி—பெரியசோமரசங்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | யார்க்காடு .. | — .. | வெளிப்பாழ்நிலம் .. | 0 | 1 | 7 | 20 |
| 3 | யார்க்காடுநிலம் .. | செ. இராசையா .. | ஷை .. | 0 | 0 | 32 | 20 |
| 4 | குடிநிலம் .. | யாட்பாண மேற்றிராணியார் அருகதனம் | தோட்டம் .. | 1 | 3 | 26 | 75* |
| 7 | இலுப்பையடிக்கமம் .. | ஆசிகுளம், கு. தம்பையா .. | நெற்செய்கைக்கேற்ற காடு .. | 6 | 3 | 34 | 32‡ |
| | பிளான் இலக்கம் 5 962. குறிச்சி—மயில்முட்டையிட்டகுளம். உருத்தாளி—முடி. | | | | | | |
| 2 | இலுப்பையடிக்கமம் .. | க. கோபாலசிங்கம் .. | காடு .. .. | 2 | 0 | 25 | 29‡ |
| 5 | இலுப்பையடிவளவு .. | ஷை .. | காடு .. .. | 1 | 0 | 30 | 23‡ |
| | பிளான் இலக்கம் 6,031. குறிச்சி—சோபாலபுளியங்குளம். உருத்தாளி—முடி. | | | | | | |
| 1 | பாலையடிக்கமம் .. | அ. கச்சமரக்காயர் .. | காடு .. .. | 5 | 3 | [illegible] | 25‡ |
| | பிளான் இலக்கம் 6 103. குறிச்சி—தெற்கிலுப்பைக்குளம். உருத்தாளி—முடி. | | | | | | |
| 1 | ஆலடிக்காடு .. | ஆ. அவிரும்பிள்ளை .. | நெற்செய்கைக்கேற்ற காடு .. | 5 | 3 | 17 | 22‡ |
| 2 | தச்சங்குளம்வயல் .. | கே. அந்தோனிப்பிள்ளை அருகதனம் | நெல்வயல் .. .. | 0 | 0 | 9 | 40* |
| 3 | ஷை .. | — .. | நெற்செய்கைக்கேற்ற கீழ்காடு | 0 | 2 | 7 | 20 |
| 4 | ஷை .. | — .. | கெமில்லாக்குள ஆற்றுக்காக விடப்பட்டது | 0 | 3 | 11 | —§ |
| | பிளான் இலக்கம் 6,104. குறிச்சி—பூதர்குளம். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | குருந்தடிக்காணி .. | — .. | பாதைக்காக விடப்பட்டது .. | 0 | 0 | 35 | —§ |
| 2 | ஷை .. | எஸ். இராமசிங்க வவுனியன் .. | உயர்காடு .. .. | 3 | 3 | 21 | 34‡ |
| 3 | ஷை .. | — .. | மைனர் றோட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 26 | —§ |
| | பிளான் இலக்கம் 6,108. குறிச்சி—கட்டையகுளம். உருத்தாளி—முடி. | | | | | | |
| 1 | கரம்பைக்காடு .. | வவுனியா, சுப்பர்வேலுப்பிள்ளை | உயர்காடு .. .. | 4 | 0 | 22 | 21‡ |
| 2 | ஷை .. | — .. | கிணற்றுக்காக விடப்பட்டது | 0 | 0 | 22 | —§ |
| 3 | ஷை .. | — .. | வண்டிப்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 34 | —§ |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 6,113. குறிச்சி—சாத்திரி கூளாங்குளம் உருத்தாளி—முடி. | | | | |
| 1 | இத்தியடிவளவு | வீ. வீரசிங்கம் | வெளிக்காணி | 0 1 13 | 31‡ |
| 2 | ஷை | — | பாதைக்காக விடப்பட்டது | 0 0 2 | —§ |
| | பிளான் இலக்கம் 6,114. குறிச்சி—புளிததித்தபுளியங்குளம். உரித்தாளி—முடி. | | | | |
| 1 | பாலையடிக்கமம் | கா. முகம்மது இஸ்மாயில் | நெற்செய்கைக்கேற்ற உயர்ந்த காடு | 1 1 6 | 26‡ |
| | பிளான் இலக்கம் 6,129. குறிச்சி—குறிசுட்டகுளம். உருத்தாளி—முடி. | | | | |
| 1 | பாலையடிக்கமம் | சூடுவெந்தபுலவு, மீ. சுலைமான் லெவ்வை | நெற்செய்கைக்கேற்ற காடு | 5 3 12 | 22‡ |
| 2 | ஷை | — | வண்டிப்பாதைக்காக விடப் பட்டது | 0 1 6 | —§ |
| | பிளான் இலக்கம் 6,137. குறிச்சி—கோளியகுளம். உருத்தாளி—முடி. | | | | |
| 1 | பாலையடிவளவு | — | வண்டிப்பாதைக்காக விடப் பட்டது | 0 0 22 | —§ |
| 2 | நாவலடிவளவு | நாகமுத்தர் மகள் சின்னுச்சி | கீழ்காடு | 1 0 8 | 25‡ |
| 3 | பாலையடிவளவு | ச. ஐயம்பிள்ளை | ஷை | 1 1 3 | 25‡ |
| 4 | ஷை | ஷை அருகதனம் | நெல்வயல் | 0 0 7 | 30* |
| | பிளான் இலக்கம் 6,139 குறிச்சி—ஆரியன்குறிசுட்டகுளம். உரித்தாளி—முடி. | | | | |
| 1 | பாலையடிக்கமம் | சி. கணவதிப்பிள்ளை | நெற்செய்கைக்கேற்ற உயர்ந்த காடு | 3 0 19 | 20·25‡ |
| 2 | ஷை | — | வண்டிப்பாதைக்காக விடப் பட்டது | 0 0 37 | —§ |
| 3 | ஆத்தியடிக்கமம் | சி. கணவதிப்பிள்ளை அருகதனம் | நெல்வயல் | 1 2 7 | 30* |
| | பிளான் இலக்கம் 6,140. குறிச்சி—கதிரவேலர் பூவரசங்குளம். உரித்தாளி—முடி. | | | | |
| 1 | ஈச்சங்குடாக்கமம் | — | பீலிக்காக விடப்பட்டது | 0 0 32 | —§ |
| 2 | ஷை | ச. வேலுப்பிள்ளை | நெற்செய்கைக்கேற்ற உயர்காடு | 5 1 34 | 28‡ |
| 3 | ஷை | — | பீலிக்காக விடப்பட்டது | 0 2 21 | —§ |
| | பிளான் இலக்கம் 6,141. குறிச்சி—நெளுக்குளம். உரித்தாளி—முடி. | | | | |
| 1 | முள்ளிப்பில | கு. கந்தையா | நெற்செய்கைக்கேற்ற உயர்காடு | 10 0 0 | 22‡ |

* இவை அருகதனங்கள்.

† இக்காணித்துண்டு வவுனியாக் குளத்தினால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடியது இக்காணிக்கு வருஷம் ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் தண்ணீர்வரி கொடுக்கவேண்டும். இவ்வரி எந்தக்காலத்திலாவது புதுப்பிக்க வேண்டி வரும். ‡ மரத்துவிலையையும் அடக்கியிருக்கிறது. § விற்பனவுக்கல்ல.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் முல்லைத்தீவு உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப்பற்றிச் சர்வேயர் ஜெனறலிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொளும்பு, 1924 ம் ஆண்டு சித்திரைமீ 15 ந் உ

சிசில் கிளமெண்தி,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முனிசிப்பல் தண்ணீர்த் தாங்கிக்கு நீர்ப்பாச்சும் ஆற்றுக்குள் சேறு பிடிப்பதை மறுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

| துண்டு | காணியின பெயர். | விவ்ரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| | பிரதம்படத்து இலக்கம் 7,114. பட்டணம்—கண்டிப் பட்டணப் பிரிவுக்குள். | | | |
| 1 | ஹந்தானதோட்டம் | தேயிலை, முதலியன | ஜோச்சுரு வாற் அண்டு கொம்பனி | 45 0 4 |

எடுத்துக்கொள்வதற்கான எகதனை செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஹூ வைகாசி மாசம் 13 ந் தேதியிலன்று 10½ மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1924 ம் ஹூ சித்திரைமீ 17 ந் உ

டபிள்யு. எல். கின்டேஸ்லி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு முகத்துவாரத் தெருவை அகலிப்பதற் கென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| | பிரதமபடத்து இலக்கம் 5,927. குறிச்சி—பாலைமீன்மடு. | | | |
| 1 | கொச்சிக்காய்த்தீவுத்தோட்டம் | வெளிவளவு தெருவுள் அடங்கியது | வி. நாகப்பர் (மட்டிக்களி) | 0 0 2·7 |
| 2 | ஷை | வெளிவளவு, ஒரு தென்னை | ஷை | 0 0 7·1 |
| 3 | ஷை | வெளிவளவு | ஷை | 0 0 10 2 |
| 4 | ஷை | தெரு | ஷை | 0 0 18 6 |
| 5 | ஷை | வெளிவளவு | ஷை | 0 0 10 8 |

எடுத்துக்கொள்ளவதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த் தக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ௵ வைகாசி மாசம் 5 ந் தேதியிலன்று 2½ மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அப்பூமிகளின் பேரால் தங்களிடமுள்ள உறுதிகளைக் கொணர்ந்து காட்டும்படிக்கும் இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது

மட்டக்களப்புக் கச்சேரி,
1924 ம் ௵ சித்திரைமீ 12 ந் ௳.

ஆர். பீ. ரேய்ஷ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

சிலாபம் டிஸ்திறிக் பிற்றிகல்கோறளை தெற்கு நாத்தாண்டியில் இருக்கும் இருபாஷை ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தை விசாலமாக்க ஓர் கட்டிடமும், உபாத்திமார் இருக்க வீடுகளும், ஓர் சமையல் அறையும் கட்டும்பொருட்டு வேலை ஒப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தமது கேள்விப்பத்திரத்தை ஓர் முத்திரித்த உறையிலிட்டு அதன் இடது மூலையில் "நாத்தாண்டிப் பள்ளிக்கூடத்தை விசாலமாக்க கட்டிடமும் உபாத்திமார் அறைகளும் சமயலறையும் கட்ட ஒப்பந்தக்கேள்வி" என்று எழுதி, புத்தளம் உதவி ஏசண்டருக்கு 1924 ம் ஆண்டு வைகாசிமீ 1 ந் திகதி, பிற்பகல் ஒரு மணிக்கு முந்தி கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

3. கேள்விக்காரன் தன்து கேள்விப்பத்திரத்தை உதவி ஏசன்றுதுரைக்கு அனுப்பமுந்தி யெந்தக் கச்சேரியிலாவது முற்பணமாகப் பத்துரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோடணைக்கவேண்டும்.

4. தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் கேள்விக்காரன் தான் குறித்த வேலையைக் கிரமமாக முடித்துப்பேடுவதாக ஞாயமான காலத்துள் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உதவி ஏசண்டுத்துரையவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### செய்யவேண்டிய வேலைகளின் விபரம்.

விசாலமாக்க கட்டவேண்டிய கட்டிடத்தின் சாலை 30 அடி நீளமும் 8 அடி 3 அங்குலம் அகலமும் கொண்டதாகயிருக்கவேண்டும். உபாத்திமாரின் அறைகள் இரண்டு. ஒவ்வொரு அறையும் 11 அடி 3 அங்குல நீளமும் 10 அடி 9 அங்குல அகலமும் அவ்வறைகளுக்குச் சேர்த்தாப்போல் 24 அடி 9 அங்குல நீளமும் 6 அடி அகலமும் உள்ள இஸ்தோப்பொன்றும். சமயல்காம்பறையின் விசாலம் 10′ × 8′ உள்ளதாயும் அதற்கிசைந்தாப்போல் 11 அடி 6 அங்குலம் நீளமும் 4 அடி அகலமுமுள்ள இஸ்தோப்பும். இச்சமயலறை பள்ளிக்கூடக் கட்டிடத்திலிருந்து 15 அடி புறம்பாய்க் கட்டவேண்டும்.

அத்திவாரம் 1 அடித்தாள்வு எல்லாஞ் சுற்றிவர சுண்ணாம்புகொண்கிறீட்டாலும், சுவர் செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட வேண்டும். தரைக்கு செங்கல் பாவி ½ இஞ்சி கனத்தில் சிமந்தி போட்டிருக்க வேண்டும்

கதவுகள் சன்னல்கள் ஒற்றுக் கொள்ளக்கூடிய பிலாமரங்களால் அல்லது ஒற்றுக்கொண்ட வேறு ஏதும் மரங்களால் செய்து சிகப்பு நீறால் பிந்தாரிக்க வேண்டும் கூரைகள் ஒற்றுக் கொள்ளக்கூடிய மரங்களால் செய்வித்து சிங்கள ஓடு போட்டதாகவு மிருக்கவேண்டும். இஸ்தோப்புக்கு நாலு தூண்கள் மரங்களால் போடவேண்டும், இவைகளின பருமன் 9 அடி ½ அங்குலம் உயரமும் 5″ × 5″ பருமனும்.

20 அடி 3 அங்குல நீளம் உள்ள ½ பூங்கொத்துத் திரைகள் பிளானில் வரைந்திருக்கிற மாதிரிக்கு சரிபண்ணவேண்டும். (இப்பிளான் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.)

ஆர். என். பொன்ட்,
டிஸ்திறிக் பள்ளிக்கூட கொம்மிற்றியின் தலைவருக்காக.

புத்தளங் கச்சேரி,
1924 ம் ஆண்டு சித்திரைமீ 8 ந் ௳.

---

சிலாபம் டிஸ்திறிக் பிற்றிகல்கோறளை தெற்கு பளுவெல்காலை என்னும் கிராமத்தில் ஓர் புதிய பள்ளிக்கூடமும், உபாத்திமாருக்கு அறையும், சமயலறையும், கக்கூசி ஒன்றும் கட்டும்பொருட்டுவேலை ஒப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தமது கேள்விப்பத்திரத்தை ஓர் முத்திரித்த உறையிலிட்டு அதன் இடதுமூலையில், "பளுவெல்காலை பள்ளிக்கூடமும், உபாத்திமாரின் அறையும், சமயலறையும், கக்கூசும் கட்ட ஒப்பந்தக்கேள்வி" என்று எழுதி புத்தளம் உதவி ஏசண்டருக்கு 1924 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

3. கேள்விக்காரன் தனது கேள்விப்பத்திரத்தை உதவி ஏசன்றுத்துரைக்கு அனுப்பமுந்தி யெந்தக்கச்சேரியிலாவது முற்பணமாகப் பத்துரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோடணைக்கவேண்டும்.

4. தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் கேள்விக்காறன் தான் குறித்த வேலையைக் கிரமாக முடித்துப்போடுவதாக ஞாயமான காலத்துள் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உதவி ஏசண்டுத் துரையவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### செய்யவேண்டிய வேலைகளின் விபரம்.

பள்ளிக்கூடத்தின் சாலை 80 அடி நீளமும் 20 அடி அகலமுங் கொண்டதா யிருக்கவேண்டும். அதுக்குச் சேர்த்து 30 அடி நீளமும் 20 அடி அகலமுங்கொண்ட இன்னுமொரு சாலை. ஒரு இஷ்டோர் அறை 12′ × 9′:3″. ஒரு அறை 12′ × 10′ இரண்டு அறைகள் 13′.8″ × 9.9′.7½″. ஒரு இஸ்தோப்பு 21′.6″ × 6′. அத்திவாரம் சுண்ணாம்பு கொண் கிறீட் 1 அடி தாள்வுள்ளதாய்ச் சுற்றிவரப் போடவேண்டும். சுவர் செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலுங் கட்டப்பட வேண்டும். நில மட்டத்தில் அரை இஞ்சு கனமுள்ள "டாம்ப் கோர்சு" ஒன்று இருக்கவேண்டும். சமயலறை 10′ × 8′. இதுக்கு ஒரு இஸ்தோப்பு 11 அடி 6 அங்குலம் நீளம் 4 அடி அகலம். கக்கூசி 6′ × 6 செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலுங் கட்டப்படவேண்டும் இதுக்கு 6 அடி தாள்வுள்ள ஒரு குழி. இக்குழியின் அடியில் 2½ அடி அகலமாயும் உட்காரும் பலகைமேல் 3 அடி அகலமாயும் இருக்க வேண்டும். இதை ஏற்றுக்கொள்ளக்கூடிய 4 பான்க்கைகளில் பிலப்படுத்தவேண்டும். சுவர்கள் சுண்ணாம்பினால் கப்பிளாரித்து இருமுறைவெள்ளை அடிக்கவேண்டும். தரைக்கு செங்கல்லுப்பிடித்து அரைஅடி கனமாய் சிமேந்து போடவேண்டும். கதவுகளும் சன்னல்களும் நல்ல அறுத்த பிலாமரத்தால் அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு மரத்தால் செய்து இரும்புவேலையினால் பிலப்படுத்தி சிகப்புத் தீந்தையால் பிந்தாரிக்கவேண்டும். பள்ளிககூடத்து சாலைக்கு 6 கேட்டுகள் போடவேண்டும். கூரைகள் ஒற்றுக்கொள்ளக்கூடிய அறுத்த மரங்களால் செய்வித்து கொளுக்கிஓடு போட்டதாகவு மிருக்கவேண்டும். 23 அடி நீளமுள்ள 11 பூங்கொத்துத்திரைகள் பிலாமரத்தினால் அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறேது மரத்தினலாவது செய்து பிலப்படுத்த வேண்டும். 9′.6″ × 5″ × 5″ உள்ள மரத்தினால் செய்து 4 மரத்தூண்கள் உபாத்தியாரின் அறைகளின் இஸ்தோப்புக்கு போடவேண்டும் சமயலறைக்கு 7′ × 4½″ × 4½″ உள்ள 3 தூண்கள். பெரிய கட்டிடம் சுற்றிலும் 10″ × ¾″ உள்ள தொங்குதிரை பலகை பிலப்படுத்திப் பிந்தாரிக்க, வேண்டும். சமயலறையின் முன்பக்கமும் பின்பக்கமும் 44 அடி நீர்ப்பாதை பீலி (W. G.) போட வேண்டும்.

ஆர். என். பொன்ற்
டிஸ்திரிக் பள்ளிக்கூட கொமிட்டியின் தலைவருக்காக.

புத்தளங் கச்சேரியில்.
1924 ம் ஆண்டு சித்திரைமீ 8 ந் திகதி.

நிலாவெளி உப்புக்குதத்திலிருந்து மட்டுக்கழப்பு உப்புக்குதத்துக்கு 20,000 அந்தர் உப்பு 1924 ம் ஆண்டு வைகாசி மாசம் 5 ந் திகதிக்கும் ஆவணி மாசம் 25ந் திகதிக்கு மிடையில் அதாவது 7,000 அந்தர் ஆனி மாசம் 25 ந் திகதிக்கும், 7,000 அந்தர் ஆவணி மாசம் 25 ந் திகதிக்கும், மீதி 6,000 அந்தர் ஆவணி மாசம் 25 ந் திகதிக்கு முன்னுமாய்க் கொண்டுபோவதற்குக் கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்

2\. நிலாவெளியிலிருந்து ஒரு அந்தர் நிறுத்து அடுக்குச் செலவு சேர்த்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்பட வேண்டும்.

3\. கேள்விக் கடுதாசியின் உறை இடப்பக்க மூலையில் உப்பு ஏற்றக் கேள்விக்கடுதாசி யென்று எழுதப்படல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் கிழக்கு மாகாண அரசாட்சி ஏசன்று அவர்களின் மட்டுக்கழப்பு கந்தோரில் 1924 ம் ஆண்டு வைகாசி மாசம் 10 ந் திகதியாகிய சனிக்கிழமை மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேர்க்கப்பட வேண்டும்.

4\. கேள்விக்கடுதாசிகள் போமில் எழுதப்படல் வேண்டும். அப்போம் மட்டுக்கழப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5\. கேள்விப் போம் பெறுவதற்கு ரூபாய் 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத் துண்டு காண்பிக்கவேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம் பெற்ற அவரின் பதில் ஆளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட தென்று எழுத்தில் அறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய பிணை கொடுக்கத் தவறினால் கட்டியபணம் ரூபாய் 50 ம் அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத்தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளில் தவறுசெய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மான மில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக் கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்குக் கையொப்பமிட்டதன்மேல் கட்டிய ரூபாய் 50 திரும்பக் கொடுக்கப்படும்

6\. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோ மென்று சம்மதம் சொல்லித்தங்கள் மேல்விலாசங்கள் கொடுக்கும் இரண்டு-தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடித மொன்று ஒவ்வொரு கேள்விக்கடுதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7\. ஒப்பந்தவேலை சரிவர நிறைவேற்றுவதற்காய் கொடுக்கும் உறுதியில் போதிய பிணைகாரர் சேரல்வேண்டும். உறுதியின் தொகையும் வேறு தேவையான விளம்பரங்களும் மட்டுக்களப்புக்கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

8\. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும் போதே அக்கேள்வியின் கொப்பி ஒன்று கேள்விக்காரனால் தபால்மூலமாய் சங்கைபோர்ந்த வருமானப் பாதுகாவலருக்கு (Controller of Revenue) அனுப்பப்படல் வேண்டும்.

9\. மேற்கூறிய கட்டுப்பாடுகள்யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விக ளொன்றும் கவனிக்கப்பட மாட்டாது.

10\. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்பட மாட்டாது, அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ் மாகாண ஏசென்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி னிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

11\. கேள்விகளி லொன்றை அல்லது எல்லாவற்றையுங் கவனிக்க அல்லது ஒரு கேள்வியின் எந்தப்பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

டீ. பி. (B) செனெவிறட்ன,
கீ. மா. அரசாட்சி ஏசண்டருக்காக.

மட்டுக்கழப்புக் கச்சேரி.
1924 ம் ஆண்டு சித்திரைமீ 11 ந் ௳.

---

மட்டுக்களப்பு உப்புக்குதத்திலிருந்து கல்முனை உப்புக்குதத்துக்கு 3,000 அந்தர் உப்பு 1924 ம் ஆண்டு வைகாசிமாசம் 15 ந் திகதிக்கும் புரட்டாதிமாசம் 15 ந் திகதிக்கு மிடையில் கொண்டுபோவதற்குக் கேள்விக்கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2\. ஒரு அந்தர் நிறுத்து அடுக்குஞ்செலவு சேர்த்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்படவேண்டும்.

3\. கேள்விக் கடதாசியின் உறை இடப்பக்க மூலையில் "உப்பு கல்முனைக்கு ஏற்றக் கேள்விக்கடதாசி" என்று எழுதப்படல்வேண்டும். கேள்விக்கடுதாசிகள் கிழக்கு மாகாண மட்டுக்கழப்பு ஏசன்று கந்தோரில் 1924 ம் ஆண்டு வைகாசி மாதம் 5 ந் திகதி திங்கட்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படவேண்டும்.

4\. கேள்விக்கடுதாசிகள் போமில் எழுதியிருக்க வேண்டும். போம் மட்டுக்கழப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5\. கேள்விப் போம் பெறுவதற்கு ரூபாய் 25 மட்டுக்களப்புக் கச்சேரியில் கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம் பெற்ற அவரின் பதிலாளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தி லறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணை கொடுக்கத் தவறினால் கட்டியபணம் ரூபாய் 25 ம் அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத்தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளில் தவறுசெய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக் கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்குக் கையொப்பமிட்டதன்மேல் கட்டிய ரூபாய் 25 திரும்பக் கொடுக்கப்படும்.

6\. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள் மேல்விலாசங்கள் கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக் கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7\. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் காசு ரூபாய் 500 பிணைகட்டவேண்டும். காசில்லாமல் ஆதனப் பிணையாய்க் கொடுக்கிறதாகில் தாய் உறுதிகள் கொண்டுவரும் பொழுது உறுதியின் பெலப்பைப்பற்றி இராசாவின் பிரக்கிராசியிடமிருந்து ஒரு சேட்டுபிக்கேற்றும், ஆதனம் ஈடு ஒற்றி மற்றும் தடை பிசகில்லை என்று காணிப்பதிவு கந்தோர் றெசிஸ்திருர் இடம் ஒரு றிப்போட்டும் கொண்டுவர வேண்டும். ஆதனத்தின் பெறுமதியையிட்டு வன்னியனாரிடம் றிப்போட்டும் தேவை.

8\. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும் போதே அக்கேள்வியின் கொப்பி ஒன்று கேள்விக்காரனால் தபால்மூலமாய் சங்கைபோர்ந்த வருமானப் பாதுகாவலருக்கு (Controller of Revenue) அனுப்பப்படல்வேண்டும்.

9\. நியமிக்கப்பட்ட கழிவுக்குமேல் ஏதாவது குறைபிருக்குமானால் ஒரு அந்தருக்கு ரூபாய் 4 சதம் 50 வீதம் கொந்திறுத்துக்காரன் கட்டவேண்டும்.

10\. வேறு தேவையான விளம்பரங்கள் மட்டுக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

11\. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்பட மாட்டாது, அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ் மாகாண ஏசென்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி னிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

12\. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விக ளொன்றும் கவனிக்கப்பட மாட்டாது. கேள்விகளி லொன்றை அல்லது எல்லாவற்றையுங் கவனிக்க அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

டீ. பீ. (B) செனெவிறட்ன,
கீ. மா. அரசாட்சி ஏசண்டருக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1924 ம் ஆண்டு சித்திரைமீ 11 ந் ௳.

---

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.